தெரியவேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று நான் எண்ணு கிறேன். அந்த வகையிலே அரசாங்கம் முயற்சித்ததா என்று தான் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் புள்ளிவிவரங்கள் வெளியிடுகிறபொழுது நன்ருக விசாரித்து, அவர்களுக்குத் தெரிந்த புள்ளிவிவரங்களைத் தான் வெளியிடுகிறது.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது இறந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவி

*405 கேள்வி.—திரு. பி. முருகையன், திரு. ஆ. துரை அரசன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில் நடந்த மாணவர்கள் இந்தி எதிர்ப்பு ஆர்பாட்டத்தில் உயிர் இழந்த மாணவர்கள் குடும்பத்திற்கும், பொதுமக்கள் குடும்பத்திற்கும் ஏதேனும் உதவி செய்யும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் உயிர் இழந்த மாணவர் ராஜேந்திரன் அவர்களுடைய குடும்பத்திற்கு டாக்டர் சி. பி. ராமசுவாமி அய்யர் அவர்கள் நன்கொடை கொடுக்க முன்வந்துள்ளார்கள். ராம் கேப்ரியல், முத்தையா ஆகியோர்கள் சம்பந்தமாகவும் நன்கொடை கொடுத்திருக்கிறோம். ஆகவே, போலீஸ்காரருடைய பிள்ளைக்கு இந்தச் சர்க்கார் சார்பில் நன்கொடை கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் இப்பொழுது அளித்த விடையை விட வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : துப்பாக்கிச் சூட்டின் காரணமாக நிராபராதிகள் இருக்கக்கூடும் என்பதை இந்த அரசாங்கம் ஆராய்ந்ததா ? அப்படி ஆராய்ந்து அவர்களுடைய குடும்பத்திற்கு உதவி நிதி அளிக்க முன்வருமா, முன்வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நிராபராதிகள் இருக்கலாம், இதிலே கலந்து கொண்டவர்களாகவும் இருக்கலாம். கூட்டத்திலே வந்து சேர்ந்தவர்களும் இதிலே பாதிக்கப்பட்டிருக்கலாம். கல்லை எடுக்கப் போனபொழுது சுடப்பட்டிருக்கிறார்கள். அம்மாதிரித் தகவல்களும் இருக்கின்றன. ஆனுல் யாருக்கு நஷ்ட ஈடு கொடுப்பது என்பது நிலைமையை ஆராய்ந்து அந்த வகையில் அரசாங்கம் முடிவு செய்கிறது.

திரு. ப. உ. சண்முகம் : இந்தச் சம்பவங்களில் வயதானவர்களும் சுடப்பட்டிருக்கிறார்கள், குழந்தைகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வயதானவர்கள் கலவரங்களில் ஈடுபட்டிருக்கலாம் என்று

அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 10, 12 வயதுக் குழந்தைகளை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்து, அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நஷ்ட ஈடு கொடுப்பது வயதைப் பொருத்ததல்ல.

திரு. பி. முருகையன்: துப்பாக்கிச் சூட்டில் இறந்து போனவர்களுடைய குடும்பத்தினருக்கும் மாணவர்களுடைய குடும்பத்தினருக்கும் இனிமேலாவது நஷ்ட ஈடு கொடுப்பதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் அளித்த விடையை விட வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை.

திரு. செ. மாதவன்: இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு அரசாங்கத்தின் மூலம் உதவி செய்யாவிட்டாலும், முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் தனியாக ஒரு கமிட்டி அமைத்து, அதன் மூலம் உதவி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் இதற்கு மேல் ஒன்றும் விடை அளிப்பதற்கு இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: சிதம்பரத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உண்மையில் அண்ணுமலைப் பல்கலைக் கழக எல்லைக்குள் அத்து மீறி போலீசார் பிரவேசித்து இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. காலேஜ் காம்பவுண்டிற்குள் போலீசார் புகுந்து சாகடித்திருக்கிறார்கள். ஆகவே, அருள் கூர்ந்து அந்த மாணவர்கள் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு தொகை கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அத்தகைய தகவல் என்னிடம் இல்லை. இன்னும் விசாரணையில் இருக்கிறது. எங்கு சுட்டார்கள் என்று விசாரித்துத் தெரிந்த பிறகு தான், விசாரணை முடிந்த பிறகு தான் இதைப்பற்றிச் சொல்ல முடியும். என்னுடைய தகவல் யுனிவர்சிடிக்கு வெளியிலே யுனிவர்சிடி காம்பசுக்கு வெளியிலே இந்தச் சம்பவம் நடந்தது என்பது தான். ஆனால், எங்கே நடந்தது, எப்படி நடந்தது என்பது பற்றி இன்னும் விசாரணை முடியவில்லை. விசாரணை முடிந்த பிறகு ஏதாவது கருத்துத் தெரிவிக்கப்படும்.

Fire accidents in 1963

* 406 *Q.*—Sri M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of fire accidents in the State during 1963;

(*b*) the estimated value of property so destroyed; and

(*c*) the number of lives lost?